**கொடபொல பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜூன் 08 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜூன் 15 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து கொடபொல பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிர்மான வேலைகள் தொடர்பாக பெறவேண்டிய ரூபா 3,168,389 தொகை நிர்மான வேலை கடன்பட்டோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | அடுத்த வருடத்தில் சரி செய்வேன். |
| (ii) | மீளாய்வாண்டின் போது சபையினால் நிர்மான வேலைகளுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 600,557 இற்கான செலவுகளை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களையும் கணக்கீடு செய்ய வேண்டும். | அடுத்த வருடத்தில் சரி செய்வேன். |
| (iii) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு உள்ளூராட்சி சேவை ஓய்வுதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 4,412,073 தொகை கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | அடுத்த வருடத்தில் சரி செய்வேன். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | முன்வரும் வருடங்களுக்காக கேள்வி அறிவித்தல் பிரசுரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 130,984 தொகை மீளாய்வாண்டிற்கான செலவொன்று என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | அடுத்த வருடத்தில் சரி செய்வேன். |

**(ஆ) தொங்கல் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் முன்கொண்டு வந்து காணப்படும் ரூபா 64,848 தொகைக்கான தொங்கல் கணக்கின் மீதியை இனங்கண்டு உரிய சீராக்கல்கள் மேற்கொண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக கண்டறிந்து கணக்குகளில் தேவையான சீராக்கல் மேற் கொண்டு தொங் கல் கணக்கு தீர்க்கப்பட வேண்டும். | தொங்கல் கணக்கு ஏற்பட்டுள்ள காரணத்தை கண்டறிந்து எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 731,652 தொகை பெறுமதியான 04 கணக்கு விடயங்களை தொடர்பாக தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது. | நிதிக் கூற்றுக் களில் காட்டப் பட்டுள்ள கணக்கு மீதி களை உறுதிப் படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய் வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.4 இணக்கமின்மை

#### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 178(7)(2) | தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் ரூபா 803,662 பெறுமதியான 08 அலுமாரிகள் | விதியின் பிரகாரம் செயற்பட | எதிர்காலத்தில் துனைக்கருவிகள் கொள்வனவின் போது |

| | | |
|---|---|---|
| மற்றும் வீதி விளக்குகள் பொறுத்துவற்காக துனைக் கருவிகள் கொள்வனவு செய்யும் போது இரகசியத்தன்மை பேணப்படும் விதமாக கூறுவிலை பெற்றிருக்கவில்லை. | வேண்டும். | இரகசியத் தன்மை பேணப்படக்கூடிய விதமாக கூறுவிலைகள் பெற்றுக்கொள்வேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,999,509 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,570,380 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2019 மதிப்பீட்டு வருமானம் | 2019 சிட்டையிடப் பட்ட வருமானம் | 2019 சேகரிக்கப் பட்ட வருமானம் | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018 மதிப்பீட்டு வருமானம் | 2018 சிட்டையிடப் பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப் பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 6,751,000 | 4,214,115 | 3,941,104 | 1,222,092 | 6,192,000 | 3,133,963 | 3,059,826 | 949,081 |
| வாடகை | 4,250,000 | 5,928,649 | 6,468,772 | 1,622,072 | 4,189,500 | 6,164,927 | 4,159,542 | 2,162,195 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 1,112,000 | 1,710,722 | 1,710,722 | - | 1,003,000 | 913,956 | 913,956 | - |
| ஏனைய வருமானங்கள் | 30,044,000 | 18,375,229 | 15,363,160 | 20,914,491 | 21,877,500 | 21,285,087 | 27,986,847 | 17,902,422 |
| மொத்தம் | 42,157,000 | 30,228,715 | 27,483,758 | 23,758,655 | 33,261,500 | 31,497,933 | 36,120,171 | 21,013,698 |

### 2.2.2 ஏக்கர் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஆரம்ப நிலுவை ரூபா 213,610 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 47,984 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 261,594 தொகை அறவிடப் பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 46,397 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 215,197 தொகை நிலுவை யாகக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | ஏக்கர்வரி பதிவேட்டின் பிரகாரம் காணிகளில் பெயர் குறிப்பிட்டில்லாத 'உரிமையாளர்' என மாத்திரம் குறிப்பிடப்பட்டுள்ள காணிகள் மற்றும் காணி உரிமையாளர்கள் இறந்துள்ள துண்டுகளாக்கப்பட்டு ஏலவிற்பனை செய்யப்பட்டிருந்த காணிகள் தொடர்பாக ரூபா 43,965 இற்கான தொகை பதிவழிப்பதற்கு 2020 பெப்ரவரி 18 ஆம் திகதி நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பிரேரணை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. |

### 2.2.3 வாடகை

#### (அ) சந்தை மீன் பலகை வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஆரம்ப நிலுவை ரூபா 1,888,974 தொகை ஆகக் காணப்பட்டதுடன், ரூபா 4,167,481 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 6,056,455 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 4,528,658 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 1,527,797 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | நிலுவை வாடகை விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவைத் தொகை அறவீடு செய்வதற்காக உரிய வாடகையாளரை கடிதம் மூலம் அறிவுறுத்தி தவணைகளாக அறவிடப்படுவதுடன் மீதி நிலுவைத் தொகைக்காக சட்ட நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) வியாபார குத்தகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆரம்ப நிலுவை ரூபா 141,637 தொகை ஆகக் காணப்பட்டதுடன், ரூபா 1,960,635 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 2,102,272 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 1,607,145 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 495,127 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | நிலுவை குத்தகை விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவைத் தொகை அறவீடு செய்வதற்காக நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. |

**2.2.4 நீர்க் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆரம்ப நிலுவை ரூபா 2,193,641 தொகை ஆகக் காணப்பட்டதுடன், ரூபா 3,099,248 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 5,292,889 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 3,294,299 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 1,998,590 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | நிலுவை கட்டணம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவைத் தொகை அறவீடு செய்வதற்காக நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரனை செய்யப்பட்டு வருகின்றது. |

**2.2.5 ஏனைய வருமானங்கள்**

**நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 2,668,691 தொகை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 16,247,209 முத்திரைக் கட்டணத் தொகை பெறவேண்டிக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பெற்றுக்கொள்வதற்காக கவனம் செலுத்தி செயற்படுவேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற் கான நீண்ட காலத்திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்க வில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் குறிக்கோள்களை அளவீடு செய்வதற்காக சுட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்தம் இலக்குகளை நெருங்கும் முன்னேற்றத்தை அளவீடு செய்யவேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் மற்றும் இலக்கு தயாரிக்கப்பட்டு வருவதுடன், அந்த திட்டங்கள் சபையின் அங்கீகாரத்துக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 11 வெற்றிடங்களை நிரப்புவதற்கும், 03 மிகை பதவியணியினை முறைப்படுத்து வதற்கும் மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | பதவியணியின் மிகை பதவி களை முறைப் படுத்துவதும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் வேண்டியுள்ளது. | மிகைப் பதவிகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன். 03 வெற்றிடங்கள் மற்றும் பெகோ இயந்திர இயக்குனர் பதவிக்கு வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு விண்ணப்பங்கள் அழைக்கப்பட்டிருந்ததுடன் அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அனைத்து ஆட்சேர்ப்புக்களும் நிறுத்தப்பட்டுள்ளன. |

**(ஆ) ஊழியர் கடன்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ஊழியர்கள் 10 பேரிடம் அறவிடப்படாமல் காணப்பட்ட ரூபா 34,371 தொகைக்கான நிலுவை கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைக் தொகை அறவீடு செய்யப்பட வேண்டும். | உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு சட்டச் செயற்பாடுகளைக் கடைபிடித்து விரைவாக அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பேன். |

**3.3 செயற்பாட்டுத் திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்கான சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாத 27 நிறுவனங்கள் காணப்பட்டதுடன், இந்த நிறுவனங்கள் மூலம் சுற்றாடலுக்கு ஏற்படும் சேதங்கள் தொடர்பாக சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. மேலும் ஒழுங்குபடுத்தல் கட்டணம் மற்றும் சுற்றாடல் அனுமதிக் கட்டணமாக ரூபா 189,000 தொகை சபைக்கு கிடைக்க வேண்டியிருந்தது. | தகைமைகளை பரிசோதனை செய்து சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்குதல் அல்லது பெற்றுக்கொள்ளாத வியாபாரங்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். | குறைபாடுகளை பூர்த்தி செய்தவுடன் அந்த கைத்தொழிலுக்கான அனுமதிப்பத்திரம் வழங்குவது எனவும் மீதியான கைத்தொழில்களுக்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளும் படி அறிவுறுத்தி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஆ) 1987 இன் 15 இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 149 ஆம் பிரிவின் பிரகாரம் வருமானத்தில் நுற்றிற்கு 01 சதவீதத்தினை மிகைக்காத கட்டணம் ஒன்று அறவிடப்பட வேண்டி இருந்த போதிலும் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் 03 ஹோட்டல்களிலிருந்து மீளாய்வாண்டிற்கான கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 03 ஹோட்டல்களில் தெனியாய வாடிவீட்டிற்கான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய 02 ஹோட்டல்களுக்காக சட்ட நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான தெனியாய மற்றும் கொட்டப்பொல இரண்டு நூலகங்களிலிருந்து காணாமல் போன புத்தகங்களின் எண்ணிக்கை 211 ஆக காணப்பட்டதுடன் அவற்றின் பெறுமதி ரூபா 51,560 தொகையாகும். | காணாமல் போன புத்தகங்களின் பெறுமதியை உரிய தரப்பினரிடம் இருந்து அறவிடப்பட வேண்டும். | தெனியான மற்றும் கொட்டப்பொல இரண்டு நூலகங்களிலிருந்து காணாமல் போன 211 புத்தகங்கள் அடுத்த பண்டக் கணிப்பீட்டிலும் காணாமல் போயுள்ளது என இனங்காணப்பட்டால் அந்தத் தொகையை உரிய உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்வேன். |